K.Sowmya

**இயற்றியவர்: சுத்தானந்த பாரதி**

**பல்லவி**

சகல கலா வாணியே சரணம் தாயே
சங்கீத வீணா பாணியே (சகலகலாவாணியே)

**அனுபல்லவி**

இகமும் பரமும் நல்ல சுகமளிக்கும் கல்வியை
எங்களுக்கருள்வாய்--- மங்களச் செல்விய

(சகலகலாவாணியே)

சரணம் 1

அறம் பொருள் இன்பமும் ஆற்றலும் ஆயுளும்
ஆத்ம ஞானமும் பூத்துப் புகழ் சிறந்தே
திறம் பெற்ற தீரராய், திருவுடை வீரராய்
தேச நலம் புரிய திவ்ய வரம் அருள்வாய்

(சகலகலாவாணியே)

**சரணம் 2**

முதுபெரும் புலவரும் முனிவரும் போற்றிய
முப்பெரும் அறிவுடன் இப்போது விளங்கிடும்
புதுப்புதுக் கலைகளும் பொருள்களும் அறிந்திங்கே
பூரணராக வாழும் புண்ணியம் அருள்வாய்

(சகலகலாவாணியே)